582

புதிய திட்ட

582
1-58

திராவிட மணி வாசகம்

முதல் புத்தகம்

449

E. RATNABAI DAVIS, M.ED.,
AND
REV. BR. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.

TB
031 (L)
N58
135635

ல் பப்ளிஷிங் கம்பெனி
: : சென்னை-31

புதிய திட்ட
திராவிட மணி வாசகம்

முதல் புத்தகம்

E. RATNABAI DAVIS, M.ED.,
AND
REV. BR. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.,
Headmaster, Christuraja Training School, Palayamkottai.

[Paper used : Double Crown 24 lbs. White Printing]

இன்டர்நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் : : சென்னை–31

PUTHIYA THITTA DRAVIDA MANI VACHAKAM

BY
E. RATNABAI DAVIS, M.ED.,
REV. BR. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.

STANDARD I

First Printed—Feb. 1958

Copyright

Price 45 *NPs.*

Kabeer Printing Works, Madras (3715) *

ஆசிரியர்களுக்கு

இந்நூல் வரிசையில் இது முதற் புத்தகம். இப்புத்தகம், அண்மையில் அரசினர் புதிதாக வெளியிட்டுள்ள பாடத்திட்டத்திற் கிணங்க இயற்றப்பட்டுள்ளது. திட்டத்திற்கு இணங்குமாறு அகர வரிசையில் தொடங்கி, வரிசையாக எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு இருப்பினும், முறையாக உயிர்மெய் எழுத்துக்கள் அறிமுகப்படுத்தும் நிலையை எட்டும் வரையில், அகரமேறிய உயிர்மெய் யெழுத்துக்களே பயின்று வருமாறு சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. புதிதாகக் கற்றுக் கொள்ளும் குழந்தைகளுக்கு முதன் முதலில் பல உயிர் மெய் யெழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டால் அவர்கள் குழப்பமடைவார்கள். இந்நோக்கத்தோடு முதலாவதாக அகரமேறிய உயிர் மெய்யெழுத்துக்களே கையாளப்பட்டுள்ளன. இப்புத்தகத்தில் காணப்படும் சிறப்பான உத்திகளுள் இஃதும் ஒன்றும்.

குழந்தைகள், பெரும்பாலும் படங்களைப் பார்த்தே சொற்களைக் கண்டுபிடித்துக் கூறுமாறு இப்புத்தகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் கற்றுக்கொள்ளும் ஒரு சொல்லின் ஒலியின் உணர்ச்சி கொண்டு அதனைத் தொடர்ந்து வேறு பல புதிய சொற்களை உச்சரிக்கப் பழகுமாறு சொற்கள் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளன. இம்முறை குழந்தைகளுக்குப் பெரிதும் பயன் தருவதாகும்.

ஒவ்வொரு பக்கத்திலும் (32-ஆம் பக்கம் வரையில்) புதிதாக வந்துள்ள எழுத்துக்கள் வர்ண மையில் அச்சிடப்பட்டுள்ளன. இப் புதிய எழுத்துக்களின் வரிவடிவத்தைக் குழந்தைகள் மறந்து விடாவண்ணம், இவை பெரிதாக வர்ண மையில் பக்கத்தின்

இறுதியில் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வெழுத்துக்கள் வர்ண மையில் அச்சிடப்பட்டிருப்பதால், வர்ணத்தினுல் கவர்ச்சிக் கப்படும் குழந்தைகள் அவற்றைத் திரும்பத் திரும்பப் பார்க்கவும், உச்சரித்துப் பழகவும், அதன் மூலமாக எழுத்துக்களின் வரி வடிவங்களை மனத்தில் இறுத்திக்கொள்ளுமாறும் அழகான எழுத் துக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள் நாள்தோறும் அடிக்கடி காணும் பொருள்களின் பெயர்களும், அவர்கள் இல்லங்களில் சாதாரணமாக வழங்கப்படும் சொற்களும் அவர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு தேர்ந் தெடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. வீடு, வீட்டுப் பொருள்கள், குடும்பம், பிராணிகள், ஊர்திகள், காய்கள், பழங்கள், பூக்கள் இவை தொடர்பான சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குழந் தைகளின் தொடக்க நிலைக்கேற்ற சிறு பாடல்களும் இதில் சேர்க் கப் பெற்றிருக்கின்றன. புத்தகத்தின் இறுதியில் எளிய சொற்க ளால் ஆன சிறு வாக்கியங்கள் கொண்ட வசன பாடங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இப்புத்தகம் நன்கு அமைவதற்கு இன்றி யமையாத பல உத்திகளைக் கைக்கொண்டு இது சிறப்பாக அமைக் கப்பட்டுள்ளது.

தமிழன்பர்கள் இந்நூலின் தரம் நோக்கி இதனை ஆதரித்து உதவுவார்கள் என்று திண்ணமாக நம்புகிறோம்.

பதிப்பாளர்கள்

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி!

படம் பார்த்துப் பெயர் சொல் :



படம் பார்த்துப் பெயர் சொல் :





அரம்



ஆலமரம்



இதழ்



ஈசல்

அ ஆ இ ஈ



உரல்



ஊதல்

எள்



ஏர்

உ ஊ எ ஏ

ஐவர்



ஒட்டகம்



ஓடம்

ஔ

ஔ

ஐ ஒ ஓ ஔ

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ



கப்பல்

கம்மல்



கமலம்



கம்பம்

க ப் ப ம் ம ல் ல

ப்ப ம்ம ம்ப



சக்கரம்



சரம்



மரம்



பம்பரம்

ச க் ர

க்க



பட்டம்

வடம்



வயல்



கலயம்

வ ய ட் ட

ட் ட்



கட்டம்



வட்டம்

தச்சர்



பதக்கம்

த ச் ர்

ச்ச



கண்

கண்ணன்

சன்னல்

மன்னன்

ண் ண ன் ன

ண் ண ன் ன

தங்கம்



ஊஞ்சல்



மஞ்சம்

மஞ்சள்

ங் ஞ் ள்

ங்க ஞ்ச



நகம்

நடனம்

பந்தம்



தந்தம்

ந் ந

ந்த



பழம்



மத்தளம்



பற்கள்



வற்றல்

ழ ள த் ற் ற

ற்ற த்த

பாடம் 1





அரம் ஆலமரம்

அவன்	ஆரம்
அப்பம்	ஆப்பம்
அண்ணன்	ஆட்டம்

நல்ல அண்ணன்

வட்ட அப்பம்

மலர் ஆரம்

ஆலம் பழம்

பாடம் 2



இதழ்



ஈசல்

இவன் இடம் இனம்

ஈ ஈரம் ஈயம்

மலர் இதழ்
இடம் ஈரம்
ஈக்கள் பறந்தன
ஈச்ச மரம்

பாடம் 3



உரல்



ஊதல்

உடல் உலகம் உயரம்

ஊக்கம் ஊர் ஊட்டம்

உலகப் படம்

மர உரல்

ஊஞ்சல் ஆட்டம்

உங்கள் ஊர்

பாடம் 4

எள்



ஏர்

எண் என்ன எவன்
எங்கள் ஏற்றம் ஏப்பம்

எங்கள் ஊர்
மர ஏற்றம்
நல்ல எண்ணம்
இந்த ஊர் எங்கள் ஊர்

பாடம் 5





ஒட்டகம் ஓடம்

ஒட்டர் ஒற்றர்

ஓரம் ஓட்டம்

ஒட்டகம் உயரம்

ஒற்றர் வந்தனர்

ஓட்டப் பந்தயம்

கடல் ஓரம்

எழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் ங் ச் ஞ் ட் ண்

த் ந் ப் ம் ய் ர்

ல் வ் ழ் ள் ற் ன்

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர

ல வ ழ ள ற ன

பாடம் 6



மரச் சட்டம்



கல் மண்டபம்

பழ	மரம்
மரச்	சன்னல்
சக்கர	வட்டம்
மத்தளச்	சத்தம்
தங்கப்	பதக்கம்
கமல	மலர்

படம் பார்த்துப் பெயர் எழுதப் பழகு :



விட்ட எழுத்துக்களைக் கண்டுபிடி :



	த	ல்

ச		ம்



வ	ட்		ம்

க		ய	ம்



க	



	க	ம்



த	ந்		ம்



ம		த	ள	

ஆ
கா
ஙா
சா
ஞா
டா
ணா
தா
நா
பா
மா
யா
ரா
லா
வா
ழா
ளா
றா
னா

பாடம் 7



கால் நாகம்

தாயார்	தட்டார்
நாய்	பாடம்
ஓணான்	கன்னார்
பால்	வாய்

தாயார் வந்தார்
அண்ணா தந்தார்
ஊரார் வந்தனர்
நாய் வால்
ஓணான் பார்

இ

கி
ஙி
சி
ஞி
டி
ணி
தி
நி
பி
மி
யி
ரி
லி
வி
ழி
ளி
றி
னி

பாடம் 8



கிளி   எலி

சிலர்	அம்மி	மனிதன்
திடம்	தம்பி	காணி
நிலம்	ஏரி	தயிர்
பிடி	விழி	விசிறி

அம்மிக் கல்
எலி பிடி
கண் விழி
காணி நிலம்
மணி அடி

ஈ
கீ
ஙீ
சீ
ஞீ
டீ
ணீ
தீ
நீ
பீ
மீ
யீ
ரீ
லீ
வீ
ழீ
ளீ
றீ
னீ

பாடம் 9



கீரி மீன்

நீர்	திடீர்	கற்றீர்
பன்னீர்	நீலம்	தீரம்
தண்ணீர்	பீலி	நீளம்
கண்ணீர்	வீதி	வீரர்

வீதி நீளம்
நீலக் கடல்
கடல் மீன்
ஏரி நீர்
பன்னீர் மணம்

உ

கு
ஙு
சு
ஞு
டு
ணு
து
நு
பு
மு
யு
ரு
லு
வு
ழு
ளு
று
னு

பாடம் 10



குளம் பந்து

குடம்	ஆயுதம்	கதவு
எறும்பு	உளுந்து	இரும்பு
முதுகு	கழுத்து	நுங்கு
கணு	நண்டு	கன்று

தண்ணீர்க் குடம்
பசு மாடு
உளுந்துப் பயிர்
நுங்கு வாங்கு
கன்றுக் குட்டி

ஊ

கூ
ஙூ
சூ
ஞூ
டூ
ணூ
தூ
நூ
பூ
மூ
யூ
ரூ
லூ
வூ
ழூ
ளூ
றூ
னூ

பாடம் 11



தூண் சூரியன்

கூடம்	கூட்டம்
பூட்டு	குண்டூசி
மூக்கு	பாலூர்
பூவாளூர்	கீழூர்
நூல்	கரூர்

பூட்டு வாங்கு
இரும்புப் பூட்டு
சூரிய ஒளி
சிறு கூட்டம்
தமிழ் நூல்

எ	ஏ
கெ	கே
ஙெ	ஙே
செ	சே
ஞெ	ஞே
டெ	டே
ணெ	ணே
தெ	தே
நெ	நே
பெ	பே
மெ	மே
யெ	யே
ரெ	ரே
லெ	லே
வெ	வே
ழெ	ழே
ளெ	ளே
றெ	றே
னெ	னே

பாடம் 12



பெட்டி தேர்

தெரு	மேலே
செண்டு	கீழே
மெய்	வெளியே
சுண்டெலி	கேணி
நெய்	நேயம்

மலர்ச் செண்டு
மெய் பேசு
பூச் செடி
பெட்டி வாங்கு
தெரு வழியே நட

ஐ

பாடம் 13

கை
ஙை
சை
ஞை
டை
ணை
தை
நை
பை
மை
யை
ரை
லை
வை
ழை
ளை
றை
னை



கை தவளை

பையன்	மழை
குதிரை	இலை
கழுதை	பூனை
எருமை	மணை

பச்சை இலை
தயை காட்டு
குடை பிடி
எருமை மாடு
வாழை இலை

ொ	ோ
கொ	கோ
ஙொ	ஙோ
சொ	சோ
ஞொ	ஞோ
டொ	டோ
ணொ	ணோ
தொ	தோ
நொ	நோ
பொ	போ
மொ	மோ
யொ	யோ
ரொ	ரோ
லொ	லோ
வொ	வோ
ழொ	ழோ
ளொ	ளோ
றொ	றோ
னொ	னோ

பாடம் 14



கொக்கு கோழி

தொட்டி சோளம்

பொட்டு தோசை

மொட்டு நோன்பு

நொண்டி போர்

தொட்டித் தண்ணீர்

நொண்டி மாடு

கோதுமைச் சோறு

மோர் குடி

போர் வீரர்

ஔ
கௌ
ஙௌ
சௌ
ஞௌ
டௌ
ணௌ
தௌ
நௌ
பௌ
மௌ
யௌ
ரௌ
லௌ
வௌ
ழௌ
ளௌ
றௌ
னௌ

பாடம் 15

ஔவையார்



வௌவால்

வௌவால் பறக்கும்

கௌதம புத்தர்

உயிர் மெய் எழுத்துக்கள்

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

பாடம் 16

விட்ட எழுத்துக்களை எழுது :



எ		
	க	ம்
ப	ந்	
	ட்	டி
	ண்	
த	வ	
கோ		
	வா	ல்

17. வீடு



வீடு	சன்னல்
கதவு	நடை
திண்ணை	வாசல்
அறை	தாழ்வாரம்
கூடம்	கிணறு

18. குடும்பம்



தாத்தா	பாட்டி
மாமா	மாமி
அப்பா	அம்மா
அண்ணன்	அக்காள்
தம்பி	தங்கை

பாப்பா

19. வீட்டுப் பொருள்கள்

அடுப்பு அகப்பை விசிறி

நெருப்பு விளக்கு கலயம்

பானை மணை அம்மி

20. உறுப்புக்கள்



தலை

முகம்

வாய்

கண்

மூக்கு

கழுத்து

காது

வயிறு

கை

கால்

பாதம்

விரல்

21. விலங்குகள்



22. ஊர்திகள்



கை வண்டி

மாட்டு வண்டி



குதிரை வண்டி



இரயில் வண்டி

வான ஊர்தி



மோட்டார் வண்டி

23. மரங்கள்



வாழை மரம்

ஆல மரம்



தென்னை மரம்



பலா மரம்

மா மரம்

ஈச்ச மரம்

24. பூக்கள்



வாழைப் பூ

தாழம் பூ

அல்லிப்பூ



செவ்வந்திப்பூ

மல்லிகைப்பூ

அரளிப் பூ

தாமரைப்பூ

மாம்பூ

25. காய்கள்



வாழைக்காய் பூசனிக்காய் கத்தரிக்காய்

புடலங்காய் வெண்டைக் காய் தேங்காய்

26. பழங்கள்

வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம்

அன்னசிப் பழம் தக்காளிப் பழம் மாதுளம் பழம்

27. ஒன்று—பல



பூ



பூக்கள்



வீடு



வீடுகள்

இலை

இலைகள்

குடை



குடைகள்

மரம்

மரங்கள்

பழம்



பழங்கள்

28. செயல்கள்

பூ பறி

ஊதல் ஊது

மணி அடி

விளக்கு ஏற்று

ஊஞ்சல் ஆடு

பட்டம் விடு

வீடு கட்டு



ஏணி ஏறு

29. பறவைகள்



1. காகம் கரையும்.
2. குயில் கூவும்.
3. புறா உயரப் பறக்கும்.
4. கருடன் வட்டமிடும்.
5. மயில் ஆடும்.
6. கிளி பேசும்.
7. பெட்டைக் கோழி முட்டை இடும்.
8. சேவல் சண்டை இடும்.

30. வீட்டு விலங்குகள்



1. பசு பால் தரும்.
2. எருது ஏர் இழுக்கும்.
3. எருது வண்டி இழுக்கும்.
4. குதிரை வேகமாய் ஓடும்.
5. குதிரையைவண்டியில்பூட்டலாம்.
6. ஆட்டின் பால் உடம்புக்கு நல்லது.
7. நாய் வீடு காக்கும்.
8. கழுதை பொதி சுமக்கும்.

31. என் வீடு



1. இது என் வீடு.
2. என் வீடு பெரியது.
3. என் வீடு சுத்தமாய் இருக்கும்.
4. என் அறை சிறியது.
5. என் அறைக்கு சன்னல் உண்டு.
6. என் அறை வெளிச்சமாய் இருக்கும்.
7. என் வீட்டில் தோட்டம் உண்டு.
8. என் வீட்டில்பூச்செடிகள் உண்டு.

32. பள்ளிக்கூடம்



1. இது என் பள்ளிக்கூடம்.
2. இதில் நான் படிக்கிறேன்.
3. இதில் ஐந்து வகுப்புக்கள் உண்டு.
4. நான் முதல் வகுப்பில் படிக்கிறேன்.
5. நான் நன்றாய்ப் படிப்பேன்.
6. நான் தெளிவாய் எழுதுவேன்.
7. என் ஆசிரியர் நல்லவர்.
8. நான் அவர் சொல்படி நடப்பேன்.

33. வகுப்பு அறை



1. இது எங்கள் வகுப்பு அறை.
2. நான் பலகையில் உட்காருவேன்.
3. அவர் என் ஆசிரியர்.
4. அவர் நாற்காலியில் இருக்கிறார்.
5. அவர் முன் மேசை இருக்கிறது.
6. அவர் என்னிடம் அன்பு உள்ளவர்.
7. அவர் எனக்குப் பாடம் கற்பிக்கிறார்.
8. நான் பாடம் கவனிக்கிறேன்.

34. தோட்டம்



1. இது எங்கள் பள்ளித் தோட்டம்.
2. நான் தோட்டவேலை செய்வேன்.
3. இதில் காய்கறிச் செடிகள் உள்ளன.
4. இதில் கொடி வகைகள் உண்டு.
5. அதோ பூச்செடிகள் பார்.
6. பூச்செடிகளில் பூக்கள் மலரும்.
7. பூக்களில் பலவகை உண்டு.
8. பூக்கள் அழகாய் இருக்கும்.

35. விளையாட்டுக்கள்

1. இது எங்கள் விளையாட்டுத் திடல்.
2. நாங்கள் இங்கு விளையாடுகிறோம்.
3. நாங்கள் கால் பந்து ஆடுவோம்.
4. சீனு பம்பரம் சுற்றுகிறான்.
5. நாங்கள் ஊஞ்சல், சடுகுடு, சறுக்கல் ஆட்டம், கைப்பந்து ஆகிய ஆட்டங்கள் ஆடுவோம்.
6. விளையாடுவது உடம்புக்கு நல்லது

36. காந்திப் பெரியார்



1. காந்தி மகான் உலகப் பெரியார்.
2. அவர் நமக்காகப் பாடுபட்டார்.
3. அவர் விடுதலை வாங்கித் தந்தார்.
4. அவர் உண்மையே பேசுவார்.
5. அவர் எல்லோரிடமும் அன்பு உள்ளவர்.
6. அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்பு மறைந்தார்.
7. அவரை என்றும் நினைவில் வை.

37. நல்ல பழக்கங்கள்

1. காலையில் எழுந்திரு.
2. கடவுளைத் தொழுதிடு.
3. பற்களைத் துலக்கிடு.
4. பாடம் படித்திடு.
5. தேய்த்துக் குளித்திடு.
6. பசித்துச் சாப்பிடு.
7. பள்ளிக்குச் சென்றிடு.
8. நல்லவனாய் நடந்திடு.
9. மாலையில் விளையாடு.
10. உண்மையே பேசு.
11. சுத்தமாய் இரு.
12. மூத்தோர் சொல் கேள்.

38. அணில்

அணிலே அணிலே, ஓடி வா.
அழகு அணிலே, ஓடி வா.
கொய்யா மரம் ஏறிவா.
குண்டுப் பழம் கொண்டுவா.
பாதிப் பழம் உன்னிடம்;
பாதிப் பழம் என்னிடம்;
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத்
தின்னலாம்!

—அழ. வள்ளியப்பா

39. கிளி

1. பச்சைக் கிளியே! வா வா ;
பாலும் சோறும் உண்ண வா ;
கொச்சி மஞ்சள் பூச வா ;
கொஞ்சி விளை யாட வா !

2. பையப் பையப் பறந்து வா,
பாடிப் பாடிக் களித்து வா ;
கையில் வந் திருக்க வா,
கனி யருந்த ஓடி வா !

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

40. முத்தம் தா

கண்ணே ! மணியே முத்தந்தா !
கட்டிக் கரும்பே ! முத்தந்தா !
வண்ணக் கிளியே ! முத்தந்தா !
வாசக் கொழுந்தே ! முத்தந்தா !
தேனே ! பாலே ! முத்தந்தா !
தெவிட்டாக் கனியே ! முத்தந்தா !
மானே ! மயிலே ! முத்தந்தா !
மடிமேல் வந்து முத்தந்தா !

—தேவி

பாப்பாப் பாட்டு

பாப்பா, பாப்பா, அழாதே!
பலூன் தாரேன்; அழாதே!
கண்ணே பாப்பா, அழாதே!
காசு தாரேன்; அழாதே!
பொன்னே பாப்பா, அழாதே!
பொம்மை தாரேன்; அழாதே!
முத்துப் பாப்பா, அழாதே!
மிட்டாய் தாரேன்; அழாதே!

—அழ. வள்ளியப்பா

ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. கண்டொன்று சொல்லேல்.
14. சனி நீராடு.
15. இணக்கம் அறிந்து இணங்கு.
16. தந்தை தாய்ப் பேண்.
17. நன்றி மறவேல்.
18. பருவத்தே பயிர் செய்.
19. அரவம் ஆட்டேல்.
20. வஞ்சகம் பேசேல்.
21. இளமையில் கல்.
22. கீழ்மை அகற்று.
23. குணமது கைவிடேல்.
24. கூடிப் பிரியேல்.

25. கெடுப்பது ஒழி.
26. கேள்வி முயல்.
27. கொள்ளை விரும்பேல்.
28. கோதாட் டொழி.
29. சூது விரும்பேல்.
30. செய்வன திருந்தச் செய்.
31. சேரிடம் அறிந்து சேர்.
32. தீவினை அகற்று.
33. தெய்வம் இகழேல்.
34. தேசத்தோடு ஒத்து வாழ்.
35. நன்மை கடைப்பிடி.
36. நீர் விளையாடேல்.
37. நூல் பல கல்.
38. நோய்க்கு இடம் கொடேல்.
39. பாம்பொடு பழகேல்.
40. பிழைபடச் சொல்லேல்.
41. பூமி திருத்தி உண்.
42. பெரியாரைத் துணைக் கொள்.
43. மீதூண் விரும்பேல்.
44. மூர்க்கரோடு இணங்கேல்.
45. மேன் மக்கள் சொல் கேள்.
46. வல்லமை பேசேல்.
47. வித்தை விரும்பு.
48. உத்தமனாய் இரு.
49. ஊருடன் கூடி வாழ்.
50. வைகறைத் துயில் எழு.

—ஔவையார்

சொற்களஞ்சியம்

அகப்பை
அடி
அடுப்பு
அப்பம்
அம்மி
அரம்
அவன்
அழகாய்
அறை
அன்பு
ஆசிரியர்
ஆடு
ஆட்டம்
ஆண்டு
ஆப்பம்
ஆயுதம்
ஆரம்
ஆலமரம்
இடம்
இடும்
இதழ்
இது
இந்த
இருக்கும்
இரும்பு
இலை
இவன்

இழுக்கும்
இனம்
ஈ
ஈசல்
ஈச்சமரம்
ஈயம்
ஈரம்
உங்கள்
உடம்பு
உடல்
உட்கார்
உண்டு
உண்மை
உயரம்
உரல்
உலகம்
உழுந்து
உள்ள
ஊக்கம்
ஊஞ்சல்
ஊட்டம்
ஊதல்
ஊது
ஊர்
ஊர்தி
எங்கள்
எண்

எண்ணம்
எருது
எருமை
எலி
எவன்
எழு
எழுது
எள்
எறும்பு
என்
என்ன
ஏணி
ஏப்பம்
ஏர்
ஏரி
ஏறு
ஏற்றம்
ஏற்று
ஐவர்
ஐந்து
ஒட்டகம்
ஒட்டர்
ஒளி
ஒற்றர்
ஓடம்
ஓட்டம்
ஓணன்

ஓரம்	கிணறு	சிறியது
கடல்	கிளி	சிறு
கட்டம்	கீரி	சுண்டெலி
கட்டு	கீழே	சுத்தம்
கண்	குடம்	சுமக்கும்
கணு	குடி	சுற்று
கத்தரி	குடை	சூரியன்
கதவு	குண்டூசி	செடி
கப்பல்	குதிரை	செண்டு
கம்பம்	குயில்	செய்
கம்மல்	குரங்கு	சென்றிடு
கமலம்	குளம்	சேவல்
கருடன்	குளி	சொல்
கரையும்	கூடம்	சோளம்
கலயம்	கூட்டம்	சோறு
கவனி	கூவும்	தக்காளி
கழுதை	கேணி	தங்கம்
கழுத்து	கேள்	தண்ணீர்
கறி	கை	தந்தம்
கற்பி	கொக்கு	தந்தார்
கற்றீர்	கோதுமை	தமிழ்
கன்று	கோழி	தயிர்
காகம்	சக்கரம்	தயை
காக்கும்	சட்டம்	தரும்
காட்டு	சண்டை	தலை
காணி	சத்தம்	தவளை
காது	சரம்	தா
காய்	சன்னல்	தாழ்வாரம்
காலை	சாப்பிடு	திடம்
கால்	சிலர்	திடல்

திடீர்
திண்ணை
தீரம்
துலக்கு
தூண்
தெரு
தெளிவாய்
தென்னை
தேங்காய்
தேய்த்து
தேர்
தொட்டி
தொழு
தோசை
நகம்
நட
நடனம்
நடை
நண்டு
நல்ல
நன்றாய்
நாகம்
நாங்கள்
நாய்
நாற்காலி
நான்
நிலம்
நினை
நீர்
நீலம்

நீளம்
நுங்கு
நூல்
நெய்
நேயம்
நொண்டி
நோன்பு
பசி
பசு
பச்சை
படம்
படி
பட்டம்
பதக்கம்
பத்து
பந்தம்
பந்தயம்
பந்து
பம்பரம்
பயிர்
பலகை
பலா
பழம்
பள்ளிக்கூடம்
பற
பற்கள்
பனை
பன்னீர்
பாடம்
பாதம்

பார்
பால்
பிடி
பீலி
புடலங்காய்
புரு
பூ
பூட்டலாம்
பூட்டு
பூனை
பெட்டி
பெட்டை
பெரிய
பேசு
பையன்
பொட்டு
பொதி
போர்
மஞ்சம்
மஞ்சள்
மணி
மணை
மண்டபம்
மத்தளம்
மயில்
மரம்
மலர்
மழை
மறை
மனிதன்

மன்னன்	வகுப்பு	விடு
மாடு	வடம்	விரல்
மாதுளம்பழம்	வட்டம்	விழி
மாமரம்	வண்டி	விளக்கு
மீன்	வந்தனர்	விளையாடு
முகம்	வயல்	வீடு
முதல்	வயிறு	வீதி
முதுகு	வழி	வீரர்
முன்	வற்றல்	வெண்டை
மூத்தோர்	வாங்கு	வெளியே
மெய்	வாசல்	வெளிச்சம்
மேலே	வாய்	வேகம்
மொட்டு	வால்	வேண்டும்
மோர்	வாழை	வேலை
யானை	விசிறி	வௌவால்